கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 22.02.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**

**மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஆய்வு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர் , தாவர நல முனைப்பு நிதி - உலக மக்காச்சோளம் மற்றும் கோதுமை மேம்பாட்டு மையம் , மெக்சிகோ மற்றும் வேளாண் மைத் துறை, சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை வட்டாரம் , கோயம்புத்தூர் மாவட்டம் இணைந்து மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஆய்வுத் திடலை விவசாயிகளின் தோட்டங்களில் அமைத்துள்ளது. இத்திடல்கள் , சுல்தான்பேட்டை வட்டத்தில், லஷ்மிநாயக்கன்பாளையம் கிராமம், தேவராஜன் அவர்கள் தோட்டத்திலும் சுல்தான்பேட்டை வட்டத்தில், அக்கநாயக்கன்பாளையம் கிராமம், பாலசுப்பிரமணியன் அவர்கள் தோட்டத்திலும் ஒரு ஏக்கர் பரப்பளவில், செப்டம்பர் மாதத்தில் மக்காச்சோளம் விதைப்பு செய்யப்பட்டு , பயிர் பராமரிப்பு செய்யப்பட்டு , பயிர் பாதுகாப்பு முறைகளான , ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறை , பூச்சிக்கொல்லிகள் மட்டுமே பயன்படுத்தும் முறை , விவசாயிகளின் நேரடி பாதுகாப்பு முறை , பாதுகாப்பு முறைகள் பயன்படுத்தாத தடுப்பு திடல் , தாவர மூலக்கூறுகள் பாதுகாப்பு முறை, உயிரியல் பாதுகாப்பு முறை என வயல்களில் உள்ளன. மேற்கண்ட பயிர் பாதுகாப்பு முறைகளின் அனுகூலம் பற்றியும் , இவற்றுள் சிறந்த முறையை தேர்ந்தெடுத்து ஏனைய விவசாயிகளுக்கு பிரபலப்படுத்தவும் உள்ளது. இதன் பொருட்டு , சிறந்த பாதுகாப்பு முறையினை தேர்ந்தெடுக்க , விவசாயிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் இணைந்து ஆய்வுத்திடல் மதிப்பீடு செய்யும் வயல்வெளி விழா 21.02.2024 அன்று இரு வயல்களிலும் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் வரவேற்புரை அளித்த பூச்சியியல் துறை இணை பேராசிரியர், முனைவர் பா.ச.சண்முகம் அவர்கள், மக்காச்சோளத்தில் தற்போது பெருகிவரும் மக்காச்சோள படைப்புழு தாக்குதலை பற்றி எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகள் கண்காட்சியில் வைக்கப்பட்ட மக்காச்சோள படைப்புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விளக்கிக் கூறினார்.

பின்னர் தலைமையுரை ஆற்றிய பயிர்ப் பாதுகாப்பு மைய இயக்குநர், முனைவர் மூ.சாந்தி அவர்கள் , மக்காச்சோளத்தில் 2018-ஆம் ஆண்டு முதல் மக்காச்சோள படைப்புழு , இந்தியாவில் ஊடுருவி , அதிக தாக்குதலை ஏற்படுத்தி வருவதாகவும் , அதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பலவிதமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை உழவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மெக்சிகோவை சேர்ந்த உலக மக்காச்சோளம் மற்றும் கோதுமை மேம்பாட்டு மையத்தின் நிதி உதவி பெற்று பயிர்களில் ஆய்வுத்திடல் அமைத்து உழவர்களுக்கு இடுபொருட்களை வழங்கி மக்காச்சோளப் படைப்புழுக்கள் மற்றும் மக்காச்சோளத்தில் வரும் நோய்களுக்கு எதிரான ஆய்வுகளை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் முனைந்து நடைமுறைப்படுத்தியுள்ளதாகக் கூறினார். இவ்விழாவில் மக்காச்சோள படைப்புழுக்களை கட்டுப்படுத்தும் முறைகள் அடங்கிய சிற்றேடு ஒன்று வெளியிடப்பட்டது

வாழ்த்துரை வழங்கிய பூச்சியியல் துறை , பேராசிரியர் மற்றும் தலைவர், மா.முருகன் அவர்கள், படைப்புழுக்கள் காலமாற்றத்தின் காரணமாக பல்வேறு நாடுகளுக்குப் பரவி வருவது போன்று இந்தியாவிற்கு வந்திருப்பதனையும், புதிதாகத் தோன்றியுள்ள பூச்சி என்பதனால் அதற்கான இயற்கை எதிரிப்பூச்சிகள் குறைந்த அளவே தற்சமயம் இருப்பதனையும், இனிவரும் காலங்களில் ஒருங்கிணைந்த முறையில் இப்பூச்சியை சிறப்பாக விவசாயிகளால் கட்டுப்படுத்த இயலும் என்பதனையும் தெரிவித்துக் கொண்டார். மேலும் , முடிந்தவரை விவசாயிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு இப்பூச்சியினைக் கட்டுப்படுத்த கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டினார். பின்னர் வாழ்த்துரை வழங்கியபயிர் நோயியல் துறை பேராசிரியர், முனைவர் க.அங்கப்பன் அவர்கள், மக்காச்சோளத்தில் பூச்சிகள் ஏற்படுத்தும் பாதிப்பு அளவிற்கு நோய் தாக்குதல் இல்லை எனவும் ஆனாலும் , சில நேரங்களில், குறிப்பிட்ட சீதோசன நிலை நிலவும் பொழுது அடிச்சாம்பல் அழுகல், மற்றும் இலைக்கருகல், புள்ளி நோய் போன்றவை ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்றும் , அதனை சரியான பூஞ்சானக் கொல்லி மருந்துகளை பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.

பின்னர், பேசிய வேளாண்மை உதவி இயக்குனர் திருமதி.கி.கண்ணாமணி அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் வேளாண்மைத் துறையும் இணைந்து, மக்காச்சோளப் படைப்புழுவினைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஆய்வுத் திடல்களையும், அதிக விவசாயிகள் சென்றடையும் வண்ணம் எடுக்கப்பட்ட சீரிய முயற்சிகளையும் விளக்கினார். உழவர்களுக்கு மகசூல் இழப்பைத் தவிர்க்கத் தேவையான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளில் நுணுக்கங்களைக் கண்டறிய சீரிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுகோள் விடுத்தார்.

தொழில்நுட்ப உரையாற்றிய நோயியல் பேராசிரியர் , முனைவர் வை.பரணிதரன் அவர்கள், மக்காச்சோள பயிரில் வரும் நோய்கள் குறித்தும் அதனை கட்டுப்படுத்துவதற்கு உண்டான வழிமுறைகளை பற்றியும் கூறினார். தொடர்ந்து, பூச்சியியல் துறை இணை பேராசிரியர், முனைவர் தி.இளையபாரதி அவர்கள் மக்காச்சோளபடைப்புழுக்களை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பற்றி விளக்கி கூறினார்.

வேப்பம் புண்ணாக்கு ஏக்கருக்கு 100 கிலோ இறுதி உழவின் போது இடுதல் வேண்டும் . சையான்ட்ரினிலிபுரோல் 19.8 %+ தயோமீத்தாக்சம் 19.8 % ஒரு கிலோ விதைக்கு 4 மிலி என்றளவில் விதை நேர்த்தி செய்யவேண்டும். இறவையில் தட்டை பயிர் , எள், துவரை அல்லது சூரியகாந்தி , மற்றும் மானாவாரியில் தீவன சோளத்தை வரப்பு பயிராக மூன்று வரிசை விதைக்க வேண்டும் . படைப்புழுக்களின் தாய் அந்திப்பூச்சி நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும் . படைப்புழுவின் பாதிப்பை கட்டுப்படுத்த மக்காச்சோளத்தின் பருவத்திற்கேற்ப பின்வரும் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை உபயோகப்படுத்த வேண்டும் . இளம் தளிர் பருவத்தில் (பயிர் முளைத்த 15-20 நாள்) குளோரான்டரினிலிபுரோல் 18.5 SC 0.4 மிலி/லி (அ) புளூபென்டமைடு 480 SC(அ) 0.4 மிலி/லி (அ) அசாடிராக்டின் 1500 பிபிஎம் 5 மிலி/லி தெளிக்க வேண்டும் . முதிர் குருத்து நிலையில் (பயிர் முளைத்த 35-40 நாள்) *மெட்டாரைசியம் அனைசோபிலியே* (TNAU-Ma-GDU) ஏக்கருக்கு ஒரு கிலோ (அ)எமாமெக்டின் பென்சோயேட் 5 SG 0.4 கிராம்/லி (அ) நொவலுரான் 10%EC 1.5 மிலி/லி (அ) ஸ்பைனிடிரோம் 11.70 SC 0.5 மிலி/லி தெளிக்க வேண்டும். பூ மற்றும் கதிர் உருவாகும் பருவத்தில் தேவைப்பட்டால் முதிர் குருத்து நிலையில் தெளிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பூச்சி கொல்லியினை (ஏற்கனவே பயன்படுத்தாத ஒன்று) தெளிக்க வேண்டும் . இக்கூட்டத்தில் 20 -க்கும் மேற்பட்ட வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**